# 2 ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு








Tamil 3rd-std_Term2.indd 6 7/29/2019 1:24:22 PM




திறன்: பண்புகளை வளர்த்தல்

**நீதிக் கருத்து : ஒற்றுமையே வலிமை**

## வாங்க பேசலாம்

- மரங்கள் விலங்குகளுக்கு மட்டுமல்ல, நமக்கும் பயன் தருகின்றன. எப்படி? உம் கருத்தை வெளிப்படுத்துக.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. ஒத்துக்கொள்கிறோம் – இச்சொல்லின் பொருள் .................

(அ) விலகிக் கொள்கிறோம் (ஆ) ஏற்றுக் கொள்கிறோம்

(இ) காத்துக் கொள்கிறோம் (ஈ) நடந்து கொள்கிறோம்

2. வேட்டை+ ஆட – இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..................

(அ) வேட்டையட (ஆ) வேட்டையாட

(இ) வேட்டைஆடு (ஈ) வெட்டையாட

AURQRQ



Tamil 3rd-std_Term2.indd 7 7/29/2019 1:24:23 PM

3. மரங்களிடையே – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............................

(அ) மரம்+ இடையே (ஆ) மரங்கள்+இடையே

(இ) மரங்கள் + கிடையே (ஈ) மரங்கல் + இடையே

4. அங்குமிங்கும் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................................

(அ) அங்கு + மிங்கும் (ஆ) அங்கும் + இங்கும்

(இ) அங்கு + இங்கும் (ஈ) அங்கும் + இங்கு

5. 'மரங்களுடன் இருந்தால் தப்பித்திருக்கலாம்' என்று கூறியது ..............................

(அ) சிங்கம் (ஆ) புலி


(இ) முயல் (ஈ) மான்

## வினாக்களுக்கு விடையளி

1. மரங்கள் எவற்றுடன் சண்டையிட்டன?
2. காட்டைவிட்டு எவை வெளியேறின?
3. விலங்குகளுக்கும் மரங்களுக்கும் போட்டிவரக் காரணம் யாது?
4. கதையின் மூலம் நீ அறிந்து கொண்டதை எழுதுக.

## புதிர்களைப் படித்து, விடையைக் கண்டறிக.

காட்டின் அரசன் ஆவான்; நெருப்பு போன்ற கண்கள் உடையவன்; முழக்கமிடுவான்– அவன் யார்?



என் உடலில் புள்ளிகள் உண்டு. நான் துள்ளித் துள்ளி ஓடுவேன். நான் யார்?



வேர்பிடித்து வளர்ந்திடுவேன்; தண்ணீரை உறிஞ்சிடுவேன்; மழைபெற உதவிடுவேன். – நான் யார்?





Tamil 3rd-std_Term2.indd 8 7/29/2019 1:24:23 PM


## எந்த மரத்திலிருந்து என்ன பொருள்? பொருத்துவோமா?



## குழுவில் சேராததை வட்டமிடுக.

1. மயில், கிளி, புறா, புலி, கோழி
2. ஆறு, ஏரி, குளம், மலை, குட்டை
3. தாயம், பல்லாங்குழி, ஐந்தாங்கல், சதுரங்கம், மட்டைப்பந்து
4. வெண்மை, கருமை, மென்மை, பசுமை, செம்மை
5. கத்தரி, வெண்டை, தக்காளி, தென்னை, மிளகாய்

## சொல் விளையாட்டு





1. ............................................ 2. ............................................ 3. ............................................

4. ............................................ 5. ............................................



Tamil 3rd-std_Term2.indd 9 7/29/2019 1:24:26 PM


## படம் பார்ப்போம்! பேசி மகிழ்வோம்!




பறவைகள், விலங்குகள், மரங்கள் ஆகியவற்றின் படங்களை வகுப்பின் எண்ணிக்கைக்கு ஏற்பத் தேர்ந்தெடுத்து அட்டைகளில் ஒட்டிக்கொள்ள வேண்டும். அந்த அட்டைகளை மேசையின் மேல் கவிழ்த்து வைக்கவேண்டும். வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவரையும் அழைத்து ஓர் அட்டையை எடுக்கச் செய்யவேண்டும். அந்த அட்டையில் என்ன படம் வருகிறதோ, அதனைப்பற்றி மூன்று தொடராவது பேசச் சொல்லவேண்டும். அவரை வகுப்பிலுள்ள மற்ற மாணவர்கள் பாராட்ட வேண்டும்.







### சிந்திக்கலாமா?

**விலங்குகளின் இருப்பிடம் காடுகள். காடுகளை அழித்து, அடுக்குமாடிகளும் தொழிற்சாலைகளும் கட்டினால், விலங்குகள் எங்குச் செல்லும்? உணவுக்கு என்ன செய்யும்? இதற்கென்ன தீர்வு?**